வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු








Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 01.08.2026 சனிக்கிழமை இதழ் : 206 பக்கங்கள் : 08


ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் வழக்கு;

# கடமை தவறிய பூஜித், ஹேமசிறி ஆகியோருக்கு மரண தண்டனை!

## கொழும்பு விசேட மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு



கொழும்பு, ஓக. 01

ஈஸ்டர் தாக்குதல் குறித்து முன்கூட்டியே உளவுத்துறை எச்சரித்திருந்தபோதிலும், நடவடிக்கை எடுக்கத் தவறியமை உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுகளில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

07

# யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக ஊடகவியலாளர்கள் போராட்டம்!




யாழ்ப்பாணம், ஓக. 01

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் சம்பவங்களுக்கு நீதியான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தி, யாழ். மாவட்ட செயலகம் முன்பாக நேற்று ஊடகவியலாளர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டு நாள் விஜயமாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன, யாழில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்ற நிலையில், யாழ்.மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கிலும் கலந்துகொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே, ஊடகப் படுகொலைகள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான் தாக்குதல்களுக்கு நீதி கோரியும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் வலியுறுத்தி ஊடகவியலாளர்கள் பிரதி அமைச்சரின் கருத்தரங்கைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களை அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

07

# புதிய இராணுவத் தளபதியாக நிலந்த பிரேமரத்ன நியமனம்



கொழும்பு, ஓக. 01

இலங்கை இராணுவத்தின் 26-வது தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் நிலந்த பிரேமரத்னவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 25 ஆவது தளபதியாக பணியாற்றி தனது பதவிக் காலத்தை நிறைவு செய்த லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோவுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்திற்கு முன்னர், நிலந்த பிரேமரத்ன

07

# வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்களின் நீண்ட காலப் பிரச்னைகளுக்குத் தீர்வு!

## யாழில் கூறினார் ஊடகப் பிரதி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக. 01

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களின் நீண்ட கால பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நோக்கில், அரசாங்கம் புதிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக ஊடகத்துறை பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரட்ன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பில், ஊடக சுதந்திரம், ஊடகவியலாளர் நலன், தொழில்முறை மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்ட அவர்,

அரசியல் மற்றும் குடிமக்கள் உரிமைகளை

07

# அரசுக்கு ஒத்தூதும் அதிகாரிகளின் சூழ்ச்சியில் வீழ்ந்துவிடவேண்டாம்!

## வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 01

மக்களின் கோரிக்கைக்கும் விருப்பங்களுக்கும் மாறாக, இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள பூர்வீக நிலங்களுக்கு நட்டஈடு வழங்கும் சதி முயற்சியை அரசின் ஏவுதலுடன் சில அரச அதிகாரிகள் முன்னெடுத்து வருவதாக வலி.வடக்கு மீள் குடியேற்ற அபிவிருத்திக் குழு கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து அந்தக் குழு வெளியிட்டுள்ள அறிவிப்பில்-

இந்த சதி முயற்சியின் ஒரு கட்டமாக, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நட்டஈடு வழங்குவதற்கான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, காணிகளை இழந்து தவிக்கும் மற்றும் எக்காலத்திலும் நட்டஈடு கோராத மக்களுக்கே பிரத்தியேகமாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

07

# வட்டுவாகல், கேப்பாபிலவு காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை!

## முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் உறுதி



முல்லைத்தீவு, ஓக. 01

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல், கேப்பா பிலவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் சில காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர தெரிவித்தார்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவப் பயன்பாட்டில் உள்ள காணிகளைச் சிவில் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல், முல்லைத்தீவு மாவட்ட

07

# மக்களின் கருத்துச் சுதந்திரத்தை அரசு ஒருபோதும் தடுக்கவில்லை!

## அமைச்சர் சுசில் ரணசிங்க

கொழும்பு, ஓக. 01

மக்களின் கருத்துச் சுதந்திரத்தையோ அல்லது அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் உரிமையையோ அரசு ஒருபோதும் தடுக்கவில்லை என்று வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அரசு ஜனநாயக வழியில் முன்னோக்கிச் செல்வதற்கு இத்தகைய ஆரோக்கியமான விமர்சனங்களும் சுட்டிக் காட்டல்களும் அவசியமானவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

# எரிபொருள் விலையில் எந்த மாற்றமும் இல்லை

கொழும்பு, ஓக. 01

ஓகஸ்ட் மாதத்துக்கான எரிபொருள் விலையில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அதன்படி தற்போது நடைமுறையில் உள்ள, 92 ரக ஒக்ரென் பெற்றோல் விலை 414 ரூபாவாகவும், 95 ஒக்ரேன் பெற்றோல் விலை 495 ரூபாவாகவும், லங்கா ஒட்டோ டீசல் விலை 382 ரூபாவாகவும் லங்கா சுப்பர் டீசல் விலை 478 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

# அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் டான் ரி.வி. அலுவலகத்துக்கு நேற்று விஜயம்



யாழ்ப்பாணம், ஓக. 01

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹர்ஸ பண்டார தலைமையிலான குழுவினர், டான் தொலைக்காட்சி அலுவலகத்துக்கு நேற்று சம்பிரதாயபூர்வ விஜயமொன்றை

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## துணுக்காயில் 156 குடும்பங்களுக்கு புதிய வீட்டுத்திட்டக் கொடுப்பனவு



முல்லைத்தீவு, ஒக. 01

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட டித்வா புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 156 குடும்பங்களுக்கு புதிய வீட்டுத்திட்டத்தின் ஆரம்பக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

பயனாளிகளுக்கு தலா ரூபா 50 இலட்சம் பெறுமதியிலான வீட்டுத்திட்டம் வழங்கப்படவுள்ளது.

இதன் ஆரம்பக் கொடுப்பனவை வழங்கும் நிகழ்வு, துணுக்காய் பிரதேச செயலாளர் ராமதாஸ் ரமேஸ் தலைமையில் துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.


இந்த நிகழ்வில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான செல்லத்தம்பி திலகநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, பயனாளிகளுக்கான ஆரம்ப கட்டக் கொடுப்பனவுகளை வழங்கினார்.

வீட்டுத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பயனாளியின் சமுர்த்தி வங்கிக் கணக்கிலும் ரூபா 20 இலட்சம் ஆரம்ப கட்டமாக வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் முதல் தவணையாக ரூபா 2 இலட்சத்துக்கான கொடுப்பனவு நிகழ்வில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரஜாசக்தி தலைவர்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

## வினாசிகுளம் பாலத்தை நிர்மாணிக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்!

### ரவிகரன் எம்.பியிடம் பொதுமக்கள் கோரிக்கை



வவுனியா, ஒக. 01

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாமடு கிராம அலுவலர் பிரிவில் உள்ள சாண்டான்குளம் வீதியைப் புனரமைத்து, அதனுடன் இணைந்துள்ள வினாசிகுளம் பாலத்தை உடனடியாக நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களின் கோரிக்கையையடுத்து அண்மையில் சம்பவ இடத்துக்குச் சென்ற ரவிகரன் எம்.பி., சாண்டான்குளம் வீதியும் வினாசிகுளம் பாலமும் சீரமைக்கப்படாததால் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வைத்தியசாலை, பாடசாலை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளைப் பெறுவதில் கடும் போக்குவரத்து சிரமங்களை எதிர்கொள்வதை நேரில் பார்வையிட்டார். மழை காலங்களில் போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்படுவதால், சேனைப்புலவு வழியாக சுமார் 4 கிலோமீற்றர் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

மேலும், பெரியகுளம், மாமடு மற்றும் பழம்பாசி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளும் விவசாய உள்ளீடுகளை கொண்டு வருவதிலும், அறுவடைப் பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வதிலும் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டது. கடந்த காலத்தில் பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்ட போதிலும், கொரோனா பெருந்தொற்றை காரணம் காட்டி அவை இடைநிறுத்தப்பட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த ரவிகரன் எம்.பி., சாண்டான்குளம் வீதியைப் புனரமைப்பதற்கும் வினாசிகுளம் பாலத்தை நிர்மாணிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தாம் கவனம் செலுத்துவதாக உறுதியளித்தார். இந்தக் களப்பார்வையில் வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் செ. சுசீலன், த. தனுசன் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச கிளைச் செயலாளர் அமலன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

## முல்லைத்தீவு-சுதந்திரபுரம் பிரதான வீதி மக்களின் பாவனைக்காகக் கையளிப்பு

முல்லைத்தீவு, ஒக. 01

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் பிரதான வீதி, புனரமைப்பு பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேனவின் பங்கேற்புடன் நிகழ்வு இடம்பெற்றது.


பல ஆண்டுகளாக புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்திருந்த இந்த வீதி, 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான செ.திலகநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர்,



பிரதேச சபை உறுப்பினர்கள், தூய்மையான இலங்கை செயற்திட்டத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் வடக்கு மாகாண இணைப்பாளர், வடக்கு மாகாண ஆளுநரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர், கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

## வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன பார்வை!



முல்லைத்தீவு, ஒக. 01

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் டாக்டர் பிரசன்ன குணசேன, வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாலத்தின் நிர்மாணப் பணிகள் 2027 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்குள் நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கள ஆய்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும், தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். (அ)

## கோவில்குடியிருப்பு பழைய பூங்கா வீதி 19.7 மில்லியன் ரூபாவில் புனரமைப்பு

முல்லைத்தீவு, ஒக. 01

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கோவில் குடியிருப்பு பழைய பூங்கா வீதி 19.7 மில்லியன் பெறுமதியில் புனரமைக்கப்படவுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன், முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், கரைது றைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், வடக்கு மாகாண இணைப்பாளர் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (அ)

## வல்வெட்டித்துறை விவசாய அமைப்புகளை சந்தித்தார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், ஒக. 01

வல்வெட்டித்துறை, கொம்மந்தறை சனசமூக நிலையத்தில் வல்வெட்டித்துறை விவசாய அமைப்புகளுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் இடையில் நேற்று முன் தினம் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

விவசாய சம்மேளனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தச் சந்திப்பில், விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச் னைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதில் புகையிலைச் செய்கை தடையிலிருந்து முழுமையாக மீள 3 - 4 வருட கால அவகாசம் வழங்கப்படவேண்டும், மாற்றுப் பயிராகச் சின்ன வெங்காயத்தைப் பயிரிட்டு சந்தைக்குக் கொண்டுவரும்வேளையில்,

அர சாங்கம் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதால் ஏற்ப டும் நட்டத்தைத் தடுக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினரிடம் விவசாயிகள் கோரிக்கை முன் வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
01.08.2026 சனிக்கிழமை
பராபவ வருடம், ஆடி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அரசாங்கத்திடம் சுமந்திரனின் கோரிக்கை

மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஓய்வு பெறும் வயதெல்லையை அதிகரிக்கும் திட்டத்துக்கு சட்டத்துறைச் சமூகத்திடமிருந்தும் எதிரணி அரசியல் கட்சிகளிடமிருந்தும் கிளம்பியிருக்கும் எதிர்ப்பைக் கண்டு அதைக் கைவிடும் எண்ணம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இல்லை என்றே இதுவரையான நிகழ்வுப் போக்குகள் தெளிவாக உணர்த்துகின்றன.

கடந்த வாரம் அமைச்சரவை அந்த திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. அரசியலமைப்பு திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான அடுத்த கட்ட செயன்முறைகளில் அரசாங்கம் இனிமேல் இறங்கும்.

இத்தகைய பின்னணியில் இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் அரசாங்கத்திடம் சில தினங்களுக்கு முன்னர் ஒரு கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வபெறும் வயதெல்லையை அதிகரிப்பதற்கு அரசியலமைப்புக்கு திருத்தத்தை (22 வது திருத்தம்) கொண்டு வரும் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு அரசாங்கம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்காக திருத்தத்தைக் கொண்டு வருவதில் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது அதன் பாராளுமன்ற உறுப்பினரான ( தற்போதைய வெளியுறவு அமைச்சர்) விஜித ஹேரத் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான அரசியலமைப்புத் திருத்தச்சட்டமூலம் ஒன்றை தனிநபர் பிரேரணையாக பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்ததை நினைவுபடுத்திய சுமந்திரன் பதவிக்கு வந்த பிறகு தேசிய மக்கள் சக்தியின் முன்னுரிமைக்குரிய விவகாரங்கள் மாறிவிட்டதாக தெரிகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் கொண்டு வந்த (1978) இரண்டாவது குடியரசு அரசியலமைப்பே அறிமுகப்படுத்திய போதிலும், அதற்கு முன்னதாகவே (1972) முதலாவது குடியரசு அரசியலமைப்புக்கு (1977 செப்டெம்பரில் ) திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்து 1978 சுதந்திர தினத்தன்று இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) ஆரம்பத்தில் இருந்தே ஜனாதிபதி ஆட்சி முறையை எதிர்த்து வந்த கட்சியாகும். இரு வருடங்களுக்கு முன்னர் இரு தேசிய தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்தி புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வந்து ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கான செயன்முறைகளை அரசாங்கம் அதன் பதவிக்காலத்தின் தொடக்கத்தில் இருந்தே ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால், மூன்று வருடங்களுக்கு பிறகு புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை முன்னெடுக்கப் போவதாக அது கூறியது. ஆனால், அரசாங்கம் பதவிக்கு வந்து இரு வருடங்கள் நிறைவடையவிருக்கும் நிலையில், அதுவும் பல்வேறு பிரச்சினைகள் கூர்மையடைந்துவரும் நிலையில் அடுத்த வருடமளவில் அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை அரசாங்கத்தினால் ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் என்று நம்புவது கஷ்டமாக இருக்கிறது.

புதிய அரசியலமைப்பின் மூலமாக மாத்திரமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும் எனறு அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருந்தது. அந்த அரசியலமைப்பை கொண்டுவரமுடியாத அளவுக்கு வேறு பிரச்சினைகள் சூழ்ந்து கொண்டால் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது என்ற இலக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடமிருந்தும் நழுவுவதற்கான ஆபத்து இருக்கிறது.

அதனால், புதிய அரசிலமைப்பைக் கொண்டுவருவதற்கு முன்னதாக தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு ஜனாதிபதி ஜெயவர்தன ஏற்கெனவே நடைமுறையில் இருந்த அரசியலமைப்புக்கு திருத்தமொன்றைக் கொண்டுவந்ததைப் போன்று அதன் மறுதலையாக அந்த ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அதே ஜெயவர்தனாவின் அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டு வரமுடியும். அதை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான பலம் அரசாங்கத்திடம் இருக்கிறது. சர்வஜன. வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் அந்த திருத்தத்துக்கு மக்களின் அங்கீகாரத்தையும் பெறவேண்டியிருக்கும்.

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான அரசியலமைப்பு திருத்தத்துக்கு எதிரணி கட்சிகளும் முழுமையாக ஆதரவளிக்கும் என்று நம்பலாம். அதனால், ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பமாகவும் அமையலாம். ஆனால், அதற்கான அரசியல் விருப்பம் அரசாங்கத்துக்கு இருக்க வேண்டுமே.

# அமெரிக்க–சவூதி அணுசக்தி ஒப்பந்தம்;

## சர்வதேச பாதுகாப்பு விதிகளை மேலும் சீரழிக்கும் ஆபத்தான முயற்சி



**அணு உலைகள் எவையும் கட்டப்படாவிட்டாலும், சவூதி அரேபியாவுடன் இரட்டை நிலைகளுடன் கூடிய ஒப்பந்தத்தை டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருப்பது, அணு ஆயுதப் பரவலின் இந்தப் புதிய யுகத்தில் மேலும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.**

ஈரான் அணுஆயுதம் பெறுவதைத் தடுப்பது என்ற காரணியை முன்வைத்து நடத்தப்படும் சட்டவிரோதப் போரைத் தீவிரப்படுத்துவதாக அச்சுறுத்திய வேளையிலேயே, டொனால்ட் ட்ரம்ப் கடந்த வாரம் இந்த பிராந்தியத்தில் அணுஆயுதப் பரவலுக்கான கதவைத் திறந்துவிட்டுள்ளார். சவூதி அரேபியா எதிர்காலத்தில் யுரேனியத்தைச் செறிவூட்டவும், சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) முழுமையான கண்காணிப்பு உரிமைகளில் இருந்து தப்பவும் வழிவகுக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சாதாரணப் பயன்பாட்டிற்கான சிவில் அணுசக்தித் திட்டம் கூட, அணு ஆயுதம் ஏந்திய சவூதி உருவாக வழிவகுக்கும் என்று வல்லுநர்கள் நீண்டகாலமாகவே எச்சரித்து வருகின்றனர்.

சவூதியின் இளவரசரும் நடைமுறைத் தலைவருமான முகமது பின் சல்மான் ஈரான் அணு ஆயுதத்தைப் பெற்றால், "நாங்களும் ஒன்றைப் பெற வேண்டியிருக்கும்" என்று கூறியிருந்தார். இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் அந்தக் கவலைகளை மேலும் அதிகரிக்கின்றன.

ஐக்கிய அரபு அமீரகம் அணுச்செறிவூட்டலை நிரந்தரமாகக் கைவிட்டு, ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி முகமையின் முழுமையான கண்காணிப்பை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தையே "தங்கத் தரம்" (Gold Standard) என்று வாஷிங்டன் முன்பு வாதிட்டது. தற்போது அதைத் தளர்த்துவது, எதிர்காலத்தில் ரஷ்யாவோ அல்லது சீனாவோ அணுசக்தி ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்போது சுட்டிக்காட்டக்கூடிய ஒரு தவறான முன்மாதிரியை அமைக்கிறது.

மத்திய கிழக்கில் ட்ரம்ப் உருவாக்கியுள்ள கொந்தளிப்பானது, அங்குள்ள அரசாங்கங்களை தங்களின் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ளவும், ஆயுதங்களைப் பெருக்கிக்கொள்ளவும் தூண்டுகிறது. வான்வழித் தாக்குதலில் பயன்படுத்தப்படும் ஏவுகணைகளின் கையிருப்பு குறைந்து வருவது குறித்த கவலைகளுக்கு மத்தியில், 13 நாட்கள் தொடர் தாக்குதல்களுக்குப் பிறகு ஈரான் மீதான தாக்குதல்களை அமெரிக்கா வார இறுதியில் நிறுத்தி வைத்தது.

இருப்பினும், இதில் இருந்து வெளிவருவதற்கான எந்தவொரு வழியும் புலப்படவில்லை. ஐ.நா பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் வியாழக்கிழமை கூறியது போல், இந்தப் பிராந்தியம் "நினைத்துப் பார்க்க முடியாத ஒரு பேராபத்தின் விளிம்பில் தள்ளாடிக்கொண்டிருக்கிறது. ஒரு மோதல் அடுத்தகட்ட தீவிரத்திற்கு வழிவகுக்கிறது."

வளைகுடா நாடுகள் அமெரிக்கா உத்தரவாதமளித்த பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டே செயல்பட்டன. ஆனால், கடந்த ஆண்டு கத்தாரில் உள்ள ஹமாஸ் தலைவர்கள் மீது பெஞ்சமின் நெதன்யாகு நடத்திய தாக்குதலானது, இஸ்ரேலிடமிருந்து (அதுவே பிரகடனப்படுத்தப்படாத ஓர் அணுசக்தி நாடு) தங்களைக் காப்பாற்ற அமெரிக்கப் பாதுகாப்பு அரண் உதவாது என்பதைக் காட்டியது.

ஈரான் மீதான கவனக்குறைவான போர், அமெரிக்க இராணுவத்தின் இருப்பையே அச்சுறுத்தலாக மாற்றியுள்ளது. அணு உலை ஒப்பந்தம் மூலம் சவூதியை மேலும் நெருக்கமாகப் பிணைக்க வாஷிங்டன் முயலலாம், ஆனால் இதில் உள்ள பில்லியன் கணக்கிலான டொலர்களே ட்ரம்பிற்கு மிகப்பெரிய தூண்டுதலாக இருக்கக்கூடும்.

பிராந்தியத்தின் உள் கட்டமைப்பு சரிவது - குறிப்பாக ஐக்கிய அரபு அமீரகம் ஒபெக் (OPEC) அமைப்பிலிருந்து வெளியேறியது - அணுஆயுதப் பரவலின் ஆபத்துக்களை மேலும் கூட்டுகிறது. அங்குள்ள நாடுகள் கணிக்க முடியாத வகையில் செயல்படத் தொடங்கியுள்ளன.

சவூதி , இஸ்ரேலை ஒரு தனி நாடாக அங்கீகரிப்பதைப் பொறுத்தே இந்த ஒப்பந்தம் அமையும் என்று அறிவித்த சில மணிநேரங்களிலேயே அமெரிக்க ஜனாதிபதி சவூதி ஒப்பந்தத்தை சந்தேகத்திற்கு உள்ளாக்கினார். அது ஒப்பந்தத்திற்கான நீண்டகால நிபந்தனையாக இருந்து வந்தது.

ஆனால் காசாவில் இஸ்ரேல் நடத்திவரும் அழித்தொழிப்புப் போர், பாலஸ்தீன அரசு உருவாக்கப்படாமல் அங்கீகாரம் சாத்தியமில்லை என்ற சவூதியின் நிலையை வலுப்படுத்தியுள்ளது. அணு உலைகள் ஏதும் கட்டப்படாவிட்டாலும் கூட, இந்த அறிவிப்பே மற்ற நாடுகள் அணுசக்தித் திறனைப் பின்தொடர்வதற்கான அங்கீகாரமாகவும் ஊக்கமாகவும் செயல்படுகிறது.

ஈரான் கட்டுப்பட்டு நடந்துகொண்ட ஒப்பந்தத்தை ஒபாமா நிர்வாகத்தின் பேச்சுவார்த்தைகள் உருவாக்கியிருந்தன - ட்ரம்ப் அந்த ஒப்பந்தத்தை சிதைக்கும் வரை. அவரின் போரானது முன்னரே கணித்தது போல், இன்னும் பலத்த அக்கிரமமும், ஆபத்து நிறைந்த முடிவுகளை எடுக்கும் தன்மையும் கொண்ட ஈரானிய ஆட்சியை உருவாக்கியுள்ளது.

மேற்கொண்டு நடத்தப்படும் இராணுவ நடவடிக்கை அணுசக்தி அச்சுறுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதை விட, அதை மேலும் ஊக்குவிக்கவே செய்யும். சவூதியும் அணுகுண்டை அடையும் என்ற வாய்ப்பு ஈரானை மேலும் தூண்டிவிடும்.

இன்னும் சற்று விரிவாகப் பார்த்தால், அமெரிக்கா-ரஷ்யா இடையிலான கடைசி அணுஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் பெப்ரவரியில் காலாவதியானது. சீனா தனது அணு ஆயுதக் கிடங்கை அதிவேகமாக விரிவுபடுத்தி வருகிறது. ட்ரம்ப் காலத்திற்கு முன்பு அமெரிக்காவின் அணுசக்தி பாதுகாப்பை நம்பியிருந்த ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகள், இப்போது தங்களது சொந்த திறன்களைப் பெறுவது அல்லது மேம்படுத்துவது குறித்து விவாதித்து வருகின்றன.

அணுஆயுதப் போட்டியை விட இராஜதந்திரம், பலதரப்பு உறவுகள் மற்றும் உலகளாவிய விதிகளே சிறந்த தேர்வு என்பதை அவற்றில் பெரும்பாலானவை புரிந்து வைத்துள்ளன. ட்ரம்ப் சர்வதேச நிறுவனங்களை நம்புவதில்லை. ஆனால், நாம் ஒரு புதிய அணுஆயுதப் பரவல் யுகத்திற்குள் நுழையும் வேளையில், தற்போதைய அணுசக்திப் பாதுகாப்பு விதிகளை நிலைநிறுத்துவது அமெரிக்காவின் நலனுக்கும் உகந்ததாகும்.

**(தி கார்டியன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆகஸ்ட் - 01 சனிக்கிழமை
பராபவ வருடம் - ஆடி 16
நல்ல நேரம் : 07.31 - 9.00
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திரிதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**இடபம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப்போன வாய்ப்புகள் தேடி வரும்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**கன்னி**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பழையசிக்கல்கள் தீரும்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். எதிலும் தெளிவு பிறக்கும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். புது வேலை அமையும்.

**தனுசு**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும்.மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக்கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். ஆடம்பர செலவுகளால் சேமிப்புகள் கரையும்.தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# கீரிமலையில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை மீள அள்ளவேண்டும்!

## வலி.வடக்கு தவிசாளருக்கு உறுப்பினர்கள் காலக்கெடு



யாழ்ப்பாணம், ஓக. 01

கீரிமலைப் பகுதியில் 300 இற்கும் மேற்பட்ட டிப்பர் கொள்ளளவு கழிவுகள் சட்ட விரோதமாக கொட்டப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டிய வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், ஆடி அமாவாசைக்கு முன்னர் அவை அனைத்தும் அகற்றப்பட்டு வலி.வடக்கு எல்லைக்கு வெளியே கொண்டு செல்லப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். தவிசாளர் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளனர்.


மாவிட்டபுரம்-கீரிமலை வீதியில் சுண்ணக்கல் அகழ்வால் உருவான பெரிய குழிகளில் வலி.தெற்கு பிரதேச சபையிலிருந்து கழிவுகள் கொண்டு வந்து கொட்டப்பட்டதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர். ஆரம்பத்தில் உக்கி மண் தன்மையிலான கழிவுகளை மட்டுமே கண்காணிப்புடன் கொட்ட அனுமதிப்பதாக கூறப்பட்ட போதிலும், பின்னர் இலத்திரனியல் மற்றும் இறைச்சிக் கழிவுகள் உள்ளிட்ட பல்வேறு கழிவுகள் எந்தக் கண்காணிப்பும் இன்றி கொட்டப்பட்டதாக குற்றம்சாட்டினர்.

இதற்கு எதிராக சபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் கழிவு கொட்டல் தொடர்ந்ததாகவும், கடந்த 27ஆம் திகதி டிப்பர் வாகனங்களை தடுத்து நிறுத்தியதையடுத்து தவிசாளர் நுழைவாயிலை சங்கிலியால் பூட்டியதாகவும் உறுப்பினர்கள் தெரிவித்தனர். ஆனால் மறுநாள் பூட்டுகள் உடைக்கப்பட்டு, அங்கு கொட்டப்பட்டிருந்த கழிவுகளுக்கு இனம் தெரியாத நபர்கள் தீ வைத்ததாகவும், இரண்டு நாட்களாக எரிந்த புகையால் அப்பகுதி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதாகவும் கூறினர்.

மேலும், அனுமதியின்றி கழிவுகளை கொட்டியவர்களுக்கும், பூட்டுகளை உடைத்து தீ வைத்தவர்களுக்கும் எதிராக தவிசாளர் பொலிஸில் முறைப்பாடு செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்படுவதுடன் தவிசாளருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகோற்சவமும், ஆடி அமாவாசையை முன்னிட்டு இலட்சக்கணக்கான பக்தர்கள் கீரிமலைக்கு வருகை தரவுள்ள நிலையிலும், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதிப்புகளைத் தவிர்க்க கழிவுகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும், வலி.வடக்கு பிரதேசத்தின் எந்தப் பகுதியிலும் அவற்றை மீண்டும் கொட்ட அனுமதிக்கக் கூடாது என்றும் உறுப்பினர்கள் வலியுறுத்தினர். (அ)

# யாழ்.மாவட்டத்தில் முதலீட்டுத் திட்டங்களை விரைவுபடுத்த விசேட கவனம் அவசியமானது



யாழ்ப்பாணம், ஓக. 01

“எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் முதலீடுகள் மிகவும் அவசியமானவையாகும். முதலீட்டாளர்கள் உரிய காலப்பகுதிக்குள் திணைக்களங்களின் அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். ஒரு திணைக்களம் அனுமதி வழங்கினாலும், மற்றுமொரு திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற தாமதமாவதால் முதலீட்டாளர்கள் விரக்தியடைகின்றனர். இது தொடர்பில் அனைத்துத் திணைக்களங்களும் விசேட கவனம் செலுத்துவதோடு, தேவைப்படின் நிபந்தனைகளுடனாவது அனுமதிகளை வழங்க முன்வரவேண்டும். அதேவேளை, முதலீட்டாளர்களும் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும், என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில், வல்வெட்டித்துறையில் அமைக்கப்பட்டுள்ள வில்லேஜ் ஹோட்டல் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட முதலீட்டாளரை நேரில் அழைத்து, அவருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாகத் திட்டத்தை ஒழுங்குமுறைப்படுத்தப் பணிப்பதெனவும், அதற்கு அவர் ஒத்துழைக்காவிடின் உரிய திணைக்களங்கள் ஊடாகச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. முதலீடுகளை நாம் வரவேற்கும் அதேவேளை, சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என இதன்போது திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை - பருத்தியடைப்புப் பகுதியில் முன்னெடுப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள “நலன்புரி நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தித் திட்டம்“ தொடர்பில் ஆராயப்பட்டது. இத்திட்டம் குறித்து, பிரதேச செயலாளர், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியன இணைந்து, அப்பிரதேச மக்களைச் சந்தித்துத் திட்டத்தின் நன்மைகள் தொடர்பில் விளக்கமளித்துத் தெளிவுபடுத்திய பின்னர் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பணிக்கப்பட்டது.

அரியாலையில் அமைப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள “யாழ்ப்பாண கரையோரக் கலாசார ஒய்விடத் திட்டம்“ குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது. இத்திட்டத்துக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர், அதனைப் பிரதேச செயலக நிலப்பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து, ஏனைய நடவடிக்கைகளைத் தொடர்வதெனமுடிவு செய்யப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வரலாற்றுப் பாரம்பரியத்துடன் பிணைப்பின்றி ஒரு நாட்டினால் அபிவிருத்தி அடைய முடியாது!

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 01

ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் செயல்பாட்டில் வெறும் பௌதிக அபிவிருத்தி மாத்திரம் போதாது என்றும், அந்த அபிவிருத்தியானது நாட்டின் கலாசாரம் மற்றும் வரலாற்றுப் பாரம்பரியங்களுடன் இயல்பாகப் பிணைந்திருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

நாட்டின் கலாசாரம் மற்றும் பெறுமதிகளுடன் ஆழமான தொடர்பில்லாமல் ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, உலகின் பெரும்பாலான நாடுகள் தமது கலாசார அடித்தளத்தின் மீதே வளர்ச்சி அடைந்துள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினார். அத்துடன், இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்பும் விடயத்தில் இந்த கலாசார அடித்தளம், மிக முக்கியமானது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்ற, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு 2026ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2027ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்த கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இந்திய நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் வழிபாட்டுத் தலங்களுக்கு சூரியசக்தி மின் வசதிகளை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதில் எழுந்துள்ள காணிப் பிரச்னைகள் குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் எழுந்துள்ள அனைத்துப் பிரச்னைகளையும் ஆராய்ந்து, அவற்றுக்குத் தீர்வுகளை வழங்கி இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

கலாசாரப் பிரிவின் கீழ் 521 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டின் கீழ் கலாசார நிலையங்கள் ஊடாக செயற்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் இதன்போது ஆராயப்பட்டதுடன், அமரதேவ நினைவிடத்தின் நிர்மாணப் பணிகள், தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தின் பிரதான கட்டடத்தில் நடமாடும் அடுக்குகள் தொகுப்பு ஒன்றை நிறுவுதல் மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

நமது பாரம்பரியங்களையும் வரலாற்றையும் தற்கால சந்ததியினருக்கு நெருக்கமாக்குவதற்காக தேசிய அருங்காட்சியகம் மற்றும் சுவடிகள் காப்பக திணைக்களத்தை டிஜிற்றல் மயமாக்கும் திட்டங்களை துரிதப்படுத்துவதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வெறும் கட்டடத்திற்குள் மாத்திரம் சுருங்கிவிடாது நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வரலாற்றை நேரடியாக அனுபவிக்கும் வகையில் அருங்காட்சியகங்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக் காட்டினார். (அ)

# நீதிபதிகளின் ஓய்வு வயது நீடிப்புக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டும்!

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஓக. 01

நீதித்துறையின் சுயாதீனத்தை பலவீனப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும். ராஜபக்ஷர்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு அரசியலமைப் புத்திருத்தம் கொண்டுவருவது முற்றிலும் தவறானதொரு எடுத்துக்காட்டு என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி காரியாலயத்தின் தீர்மானத்தை அமைச்சரவையின் தீர்மானம் என்று குறிப்பிட முடியாது.

அமைச்சரவையின் தலைவராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பெயரளவில் செயற்படுகிறார். மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தான் சகல தீர்மானங்களையும் எடுக்கிறார்.

வெளிப்பாடையான பேச்சுவார்த்தைகள் ஏதும் இல்லாமல் நீதிபதிகளின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த செயற்பாட்டுக்கு எதிராக ஒட்டுமொத்த சட்டத்தரணிகளும் இன்று ஒன்றிணைந்துள்ளார்கள்.

அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான இந்த செயற்பாட்டுக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும். நீதிபதிகளின் பதவிக் காலத்தை நீடிக்கும் தீர்மானத்துக்கு அரசாங்கம் முன்வைக்கும் காரணிகள் அடிப்படையற்றவை.

நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாக விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்காகவே நீதிபதிகளுக்கு மேலதிகமாக 2 ஆண்டுகள் பதவி நீட்டிப்பு வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. உண்மையான நோக்கம் ஜனாதிபதியிடம் காணப்படுமாயின் உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் காணப்படும் 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

ராஜபக்ஷர்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வருவது முற்றிலும் தவறானதொரு எடுத்துக்காட்டு- என்றார். (அ)

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல்:

# தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு சாட்சிய விவரங்களை வெளியிடத் தடை

கொழும்பு, ஓக. 01

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக, சம்பவம் நிகழ்ந்தபோது கடமையில் இருந்த பிரதம சிறைச்சாலை அதிகாரி வழங்கிய சாட்சியத்தில் தேசிய பாதுகாப்பை பாதிக்கக்கூடிய மிகுந்த உணர்வுபூர்வமான தகவல்கள் உள்ளதாக நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, அந்தச் சாட்சியத்தில் இடம்பெற்றுள்ள தகவல்களை எந்தவொரு ஊடகமும் வெளியிடக்கூடாது என நீர்கொழும்பு நீதவான் ஷிலானி பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

மேலும், குறித்த சாட்சிப் பதிவை பாதுகாப்பாக நீதிமன்றத்தின் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்குமாறும், நீதிமன்றப் பதிவாளருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்தில் 10 சிறைச்சாலை அதிகாரிகளும் 22 கைதிகளும் உயிரிழந்தமை தொடர்பான விசாரணையின் போது, சம்ப வம் இடம்பெற்ற வேளையில் நீர்கொழும்பு சிறைச்சாலையின் பிரதம சிறைச்சாலை அதிகாரி யாக பணியாற்றிய விக்ரம ஜயந்த குமார நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.

இதற்கிடையில், வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட 89 சிறைச்சாலை காவல் அதிகாரிகள் தொடர்பான விவரங்களும், கொழும்பு மற்றும் நீர்கொழும்பு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்கள் தொடர்பான விரிவான அறிக்கையும் சிறைச்சாலை திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (அ)

# நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்தும் முன்மொழிவை உடனடியாக மீளப் பெறுங்கள்!

## இலங்கைத் திருச்சபை அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 01

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்புத் திருத்தத்தை உடனடியாகத் திருச்சபை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் சட்டத்தின் ஆட்சி, நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதை உறுதி செய்யும் நோக்கில் இந்த கோரிக்கை விடுக்கப்படுவதாக இலங்கைத் திருச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைத் திருச்சபையின் (அங்கிலிக்கன் திருச்சபை) கொழும்பு ஆயர் துஷாந்த ரொட்ரிக்கோ மற்றும் குருநாகல் ஆயரும் தலைமை ஆயருமான நிஷாந்த பெர்னாண்டோ ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# டிஜிற்றல் கட்டண வசதியுடன் 104 புதிய மெட்ரோ பஸ்கள்!

கொழும்பு, ஓக. 01

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள 104 புதிய 'மெட்ரோ' பஸ்கள் வரும் செப்ரெம்பர் மாதம் முதல் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

ராகமை முதல் பத்தரமுல்லை வரையிலான வழித்தடங்களில் இந்தப் பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பஸ்கள் இயக்கப்படும் முக்கிய மத்திய நிலையமாகப் பொரளை விளங்கும் என்று 'மெட்ரோ பஸ்' நிறுவனத் தின் தலைவர் தெரிவித் துள்ளார்.

முழுமையாகக் குளிரூட்டப்பட்ட சொகுசு வசதிகளைக் கொண்ட மெட்ரோ பஸ்களே இலங்கைக்குக் கொண்டுவ ரப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பஸ்களில் பயணக் கட்டணம் செலுத்தும் நடைமுறை முற்றிலும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது.

இப் பஸ்களைப் பராமரிப்பதற்காகப் புதிதாக 4 பணிமனைகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாக மெட்ரோ பஸ் நிறுவனத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# டொப்ளர் வானிலை ராடர் திட்டம் பாதுகாப்புச் செயலாலர் ஆராய்வு



கொழும்பு, ஓக. 01

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தா, ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் டொப்ளர் வானிலை ரேடார் திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக புத்தளத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

இத்திட்டம் இலங்கையின் வானிலை முன்னறிவிப்பு மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கை வழங்கும் திறன்களை குறிப்பிடத்தக்க வகையில் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அங்கு வருகை தந்த பாதுகாப்புச் செயலாளரை, வானிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.எல்.கே. விஜேமான்ன வரவேற்றதுடன், தள ஆய்வு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து அவருக்கு விளக்கமளித்தார்.

இதன்போது, திட்டப் பொறியியலாளர்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நிர்மாணப் பணிகள், பாதுகாப்புச் செயலாளரின் முந்தைய விஜயத்தைத் தொடர்ந்து எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் திட்டத்தின் எதிர்கால நடைமுறைப்படுத்தல் கால அட்டவணை குறித்து விரிவான விளக்கத்தை வழங்கினர்.

திட்ட கால அட்டவணையின்படி, ரேடார் கட்டமைப்பை நிறுவும் பணிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், முழுத் திட்டமும் அடுத்த ஆண்டு ஜூலை மாத இறுதிக் குள் நிறைவடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதுவரை எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து திருப்தி தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், திட்டமிடப்பட்ட காலக்கெடுவுக்குள் திட்டத்தை நிறைவு செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

வானிலை முன்னறிவிப்புகளின் துல்லியத்தன்மையை அதிக ரித்து, தீவிர வானிலை நிகழ்வு களுக்கு எதிரான நாட்டின் தாங்குதிறனை வலுப்படுத்த முடியும் என அவர் சுட்டிக் காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# விலை உயர்வுக்கு மத்தியிலும் மதுவரி வருவாய் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 01

2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை மதுவரித் திணைக்களம் 141.5 பில்லியன் ரூபாய் வரி வருவாயை ஈட்டியுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2026 ஆம் ஆண்டுக்காக அரசாங்கம் நிர்ணயித்துள்ள மொத்த 245 பில்லியன் ரூபாய் வருவாய் இலக்கில், முதல் ஆறு மாதங்களுக்கான இலக்கு 119.3 பில்லியன் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட இலக்குடன் ஒப்பிடுகையில் 118.6 வீத வருவாய் இலக்கை எட்டும் வகையில் திணைக்களம் வருவாய் ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பதிவான 117.03 பில்லியன் ரூபாய் வருவாயுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வருவாய் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.பி. என்.ஏ. ஹேமரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மதுபான உற்பத்திக்காக 17.25 மில்லியன் லீற்றர் நிரப்பூரண மதுசாரம் பயன்படுத்தப்பட்ட நிலையில், 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அது 19.6 மில் லியன் லீற்றராக அதிகரித்துள்ள தாகவும் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது.

மதுபானப் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில் அரசாங்கம் அவ்வப்போது மதுபான விலைகளை அதிகரித்திருந்த போதிலும், பல்வேறு நிர்வாக மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலம் மதுவரி வருவாயை அதிகரிக்கவும் பாதுகாக்கவும் முடிந்துள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ)

## மாவடி முருகனின் தீர்த்தோற்சவம்



காரைதீவு, ஒக. 01

நூற்றுக்கணக்கான அடியார்களின் அரோஹரா கோஷம் விண்ணைத்தொட காரைதீவு மாவடி கந்தசுவாமி நேற்று முன் தினம் தீர்த்தமாடினார்.

வழமைபோல் பாரம்பரிய காவடிகள் மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் சகிதம் முருகப்பெருமான் ஆரோகணித்து வீதியுலா வந்து சமுத்திரத்தில் தீர்த்தமாடினார்.

வரலாற்றுப் பெருமை கொண்ட மாவடிக் கந்தன் ஆலய தீர்த்தோற்சவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் சமுத்திரத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை புற்றுநோய்ப் பிரிவுக்கு நன்கொடைகள்



மட்டக்களப்பு, ஒக. 01

மட்டக்களப்பு பாரம்பரிய லயன்ஸ் கழகமும்,இலங்கை அபேக்சா நன்கொடை நிறுவனமும் இணைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவுக்கு பல மில்லியன் பெறுமதி வாய்ந்த நன்கொடைளை பொருட்களாக வழங்கின.

இந்த நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஆர் முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது .

இதன்போது நாளக் குழாய்களை கண்டுபிடிக்கும் இயந்திரம் , சிறுநீர் இழக்கி மருந்து வகைகள் தண்ணீரை சுத்தப்படுத்தி வடிகட்டி குடிதண்ணீருக்கு பாவிக்கும் பொறிமுறை கொண்ட இயந்தி ரங்கள் , சுவரில் மாட்டும் மின்விசிறிகள், சக்கர நாற்கா லி கள் போன்ற பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. (அ)

## புதையல் தோண்டிய இருவர் கைது!

கொழும்பு, ஒக. 01

தமன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஹாநாகபுர பகுதியில், வீடொன்றினுள் புதையல் எடுக்கும் நோக்கில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட இரு சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

தமன பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே, அகழ்வாராய்ச்சிக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களுடன் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 35 மற்றும் 45 வயதுடைய மஹாநாகபுர மற்றும் வடிநாகல பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த சம்பவம் தொடர்பாக தமன பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

## சமூக ஊடகங்களில் ஜனாதிபதியை விமர்சித்த பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, ஒக. 01

ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் சங்கடத்தை ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் பல்வேறு விளம்பரங்களை வெளியிட்டதாக சந்தேகிக்கப்படும் பொலிஸ் அதிகாரி ஒருவரை மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகம் கைது செய்துள்ளது.

மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் கணினிப் புலனாய்வுப் பிரிவு நேற்று மேற்கொண்ட நடவடிக்கையின் போது சம்பந்தப்பட்ட அதிகாரி கைது செய்யப்பட்டார்.

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் விளம்பரங்கள் குறித்த விசாரணை, பொலிஸ் மா அதிபருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்திடம் ஒப்படைக்கப் பட்டது.

விசாரணைகளின்படி, கைது செய்யப்பட்ட சந்தேகத்திற்குரிய அதிகாரி, எம்பிலிப்பிட்டிய சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பணியாற்றுபவர் ஆவார்.

சந்தேகத்திற்குரிய பொலிஸ் அதிகாரி கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார், மேலும் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகம் நடத்தி வருகிறது. (அ)

## கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு ஹெரோயின் கடத்திய இருவர் கைது!

மட்டக்களப்பு, ஒக. 01

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட போதைப்பொருள் வியாபாரியைப் பார்வையிடுவதற்காக கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வந்திருந்த இருவர், ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த 26 மற்றும் 31 வயதுடையவர்கள் எனவும், அவர்களில் ஒருவர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் வியாபாரியின் சகோதரர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 7.5 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட குறித்த போதைப்பொருள் வியாபாரி, நீர்கொழும்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அங்கு அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தைத் தொடர்ந்து அவர் உட்பட 60 கைதிகள் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தனது சகோதரரைச் சந்திப்பதற்காக கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வந்திருந்த அவர் மற்றும் நண்பர், கல்லடி பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் தங்கியிருந்துள்ளனர்.

இரகசிய தகவலின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்த மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாரின் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு, குறித்த உணவகத்தில் சோதனை மேற்கொண்டது.

அதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து 100 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன், இருவரும் கைது செய்யப்பட்டனர். (அ)

## முன்னாள் பொலிஸ் அதிகாரிகள் உட்பட மூவருக்கு கடூழிய சிறை!

கொழும்பு, ஒக. 01

2008 ஆம் ஆண்டு தெஹிவளையில் உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பான வழக்கில், இரண்டு முன்னாள் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட மூவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடுமையான சிறைத்தண்டனை விதித்துள்ளது.

நீண்ட கால விசாரணையின் முடிவில் தீர்ப்பளித்த நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி, சந்தேக நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள் ளதாக தீர்ப்பளித்தார்.

அந்த மோதலைத் தொடர்ந்து இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி, இந்த மூவருக்கும் எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தொடர்ந்திருந்தார். (அ)

## சிறைக்கைதிகளின் பஸ்ஸை இரகசியமாக காணொளியாக பதிவு செய்த பெண் கைது!

கொழும்பு, ஒக. 01

உடுகம நீதவான் நீதிமன்றத்திற்கு கைதிகளை ஏற்றிச் சென்ற சிறைக்கைதிகள் பஸ்ஸை தனது கைபேசியில் இரகசியமாக வீடியோ எடுத்த பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுகம நீதவான் நீதிமன்றத்தின் முன்பாக தனது கைபேசியை மறைத்து வைத்து, அப்பெண் சிறைக்கைதிகள் பஸ்ஸை இரகசியமாக வீடியோ எடுத்ததாக உடுகம பொலிஸார் தெரிவித்தனர்.

உடுகம பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பேரில் அப்பெண் கைது செய்யப்பட்டார்.

அவரால் குற்றம் செய்யும் நோக்கத்துடன் இந்த வீடியோ எடுக்கப்பட்டதா என்பது குறித்து பொலிஸார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

## டெங்கு தொற்றினால் 84,724 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஒக. 01

நாட்டில் இவ்வருடம் இது வரை டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 62 ஆக உயர்வடைந் துள்ளதுடன், அடையாளம் காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை யும் 84 ஆயிரத்தைக் கடந்துள் ளது என்று தேசிய டெங்கு கட்டுப் பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 85 ஆயிரத்து 724 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதத்தில் கடந்த 30 நாள்களில் 29 ஆயிரத்து 350 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டெங்கு நோய்ப் பரவலைக் கருத்திற்கொண்டு, நாடளாவிய ரீதியில் 175 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதி உயர் டெங்கு அபாயமிக்க பகுதிகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அரசுக்கு ஒத்தூதும் அதிகா..

இவ்வாறு அழைக்கப்படும் மக்களிடம் ஏதோ ஒரு வகையில் சம்மதத்தைப் பெற்று, அவர்களின் பூர்வீகக் காணிகளை நிரந்தரமாகக் கபளீகரம் செய்யவே இன்றைய அரசும் அதன் அதிகாரிகளும் தீவிரமாக முயற்சிக்கின்றனர்.

இராணுவப் பிடிக்குள் இருக்கும் தமது சொந்த நிலங்களை நிபந்தனையின்றி விடுவிக்குமாறு கோரி மயிலிட்டி மக்கள் தொடர்ந்து 15 வாரங்களாகத் தொடர் அடையாளப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், மக்களின் இந்த நியாயமான போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் சதி வேலைகளிலேயே அரசு இறங்கியுள்ளது.

எனினும், பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் உறுதியாக நின்று போராடினால் மட்டுமே எமது காணி நிலங்களை வெற்றிகரமாக மீட்டெடுக்க முடியும்.

மக்களின் காணிகளைச் சுவீகரிக்கத் துடிக்கும் அரசின் கோரிக்கைக்கு இணங்க, குறித்த கலந்துரையாடல் தினத்துக்கு முன்னர் எந்த வகையான நட்ட ஈடு, எந்தக் காலப்பகுதிக்குள் வழங்கப்படும் என்பது குறித்த தெளிவான உத்தரவாதத்தை அரசு எழுத்து மூலம் வழங்கவேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

அரசின் சூழ்ச்சி வலையில் சிக்கி, நட்ட ஈட்டிற்காக எமது பூர்வீகச் சொத்துக்களை இழந்துவிடாமல் மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்-என்றுள்ளது. (அ-05)

## மக்களின் கருத்து சுதந்தி...

சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவும் நீதித்துறையைப் பலப்படுத்தவுமே மக்கள் தெளிவான ஆணையை வழங்கினர். கடந்த காலங்களில் அரசியல் தலையீடுகளால் பாதிக்கப்பட்டிருந்த நீதித்துறை, பொலிஸ் மற்றும் அரச நிறுவனங்களில் தற்போதைய அரசு அரசியல் தலையீடுகளை முற்றிலும் நிறுத்தியுள்ளது.

காணி வழக்குகள் 15 முதல் 20 ஆண்டுகள் வரை இழுபறியாக இருப்பதும், சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தாமதமாவதும் முறைப்பாட்டாளர்களையும் எதிராளிகளையும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்குகின்றது.

தேங்கிக் கிடக்கும் சுமார் 11 இலட்சம் வழக்குகளை விரைவாக முடிவுக்குக் கொண்டுவர புதிய நீதிமன்றங்களை அமைத்தல், புதிய நீதிபதிகளை நியமித்தல் மற்றும் பணியிடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது நீதித்துறை சீர்திருத்தங்களின் ஒரு பகுதி மட்டுமேயாகும். இது அவசர முடிவு அல்ல, இதற்கு முன் அரசமைப்புத் திருத்தக் குழுக்களில் விமர்சகர்களாலும் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

நீதிமன்றங்களை டிஜிற்றல்மயமாக்குதல், அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் புதிய அதிகாரிகளையும் உபகரணங்களையும் வழங்குதல் போன்றன முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், பொலிஸாருக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, அரசியல் தலையீடின்றி சுதந்திரமாகச் செயற்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 22 மில்லியன் மக்கள் வாழும் நாட்டில் புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்போது மாறுபட்ட கருத்துக்களும் விமர்சனங்களும் எழுவது இயல்பானது.

மக்களின் எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் அரசு கவனித்து, அவற்றை மதிப்பாய்வு செய்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்கின்றது-என்றார். (அ)

## யாழ் மாவட்ட செயலகம்...

இதேவேளை, பிரதி அமைச்சர் ஊடகவியலாளர்களைச் சந்திப்பதைத் தவிர்த்தது கருத்தமர்வில் பங்கேற்றார்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் ஊடகப் பிரதி அமைச்சரை சந்திக்க யாழ்.மாவட்ட செயலகத்துக்குள் நுழைய முற்பட்டவேளை,பொலிஸார் ஊடகவியலாளர்களை உள்ளே அனுமதிக்க மறுத்தனர்.

தொடர்ந்து பிரதி அமைச்சருக்கு எதிராக கோஷங்களை எழுப்பிய ஊடகவியலாளர்கள், பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

மாவட்ட செயலக வளாகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தபட்டிருந்தது. (அ)

## அரச தகவல் திணைக்களப்...

மேற்கொண்டனர்.

இதன்போது, டான் தொலைக்காட்சியின் நவீன ஒளிபரப்புத் தொழில்நுட்பக் கட்டமைப்பு, 24 மணி நேர செய்திச் சேவை, கல்வி ரி.வியின் சேவையையும் அவர்கள் பாராட்டினர்.

டான் தொலைக்காட்சி மேற்கொண்டு வரும் தொழில்முறை ஊடகப் பணிகளையும், குறிப்பாக போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு உள்ளிட்ட சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சிகளையும் பணிப்பாளர் நாயகம் ஹர்ஸ பண்டார பாராட்டினார்.

அத்துடன், அரசாங்க தகவல் திணைக்களத்திற்கும் டான் ஊடக நிறுவனத்துக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பும் தொழில்முறை உறவுகளும் எதிர்காலத்தில் மேலும் வலுப்பெறும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார். (அ)

## வட்டுவாகல், கேப்பாபிலவு...

செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் வரவேற்புரையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன், ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் தொடர்ச்சியாக எமது மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக வருகை தந்துள்ள பாதுகாப்பு பிரதியமைச்சரை வரவேற்கின்றேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 17 ஆண்டுகளில் 2,262.5 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இன்னமும் 1,493.2 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. இதில் வட்டுவாகல் மற்றும் கேப்பாபிலவில் அமைந்துள்ள காணிகள் மிக முக்கியமானவையாகும் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய கூட்டுறவுப் பிரதியமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க, நாட்டில் மீண்டும் போர் ஏற்படாது. இருப்பினும், பாதாள உலகக் குழுக்களின் கட்டுப்பாடு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட தேசியப் பாதுகாப்புடன் தொடர்புடைய சில முக்கிய விடயங்கள் உள்ளன. இவை குறித்தும் கவனம் செலுத்தி, மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மக்களுக்குரிய காணிகளை மீள வழங்குவதில் அரசாங் கம் உறுதியாக உள்ளது-என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர் நா.வேதநாயகன், நான் முல்லைத்தீவு மாவட்ட செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில், தற்போதைய பாதுகாப்பு பிரதியமைச்சர் இங்கு படைப்பிரிவுத் தளபதியாக பணி யாற்றினார். அன்றைய காலகட்டத்தில் மீள்குடியமர்வுக்கு அவர் வழங்கிய ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். அன்று அவருடன் கலந்துரையாடி மக்களின் மீள்குடியமர்வு மற்றும் காணிகள் விடுவிப்பைச் சாத்தியமாக்கியிருந்தோம். தற்போதும் இத்தகைய கலந்துரையாடல்கள் ஊடாகக் காணிகளை விடுவிக்க முடி யும் என நம்புகின்றேன்.

தேசியப் பாதுகாப்பு மற்றும் மக்களின் கோரிக்கைகள் ஆகிய இரண்டும் இரு வேறு முக்கிய முனைகளாகும். இவ்விரண்டுக்கும் இடையே சீரான சமநிலையைப் பேணி நாம் தீர்வை எட்ட வேண்டியுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மக்களுக்குச் சொந்தமான காணிகள் அவர்களிடம் கையளிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார். எனவே, நாம் ஆக்கபூர்வமாகக் கலந்துரையாடிச் சிறந்த முடிவுகளை எடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய பாதுகாப்பு பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர, தேசியப் பாது காப்பை உறுதிப்படுத்துவதற்காகவே நாட்டின் 25 மாவட் டங்களிலும் முப்படையினரின் முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன. நாட்டில் ஏற்படும் அசாதாரண மற்றும் இடர் நிலைமைகளின் போது பொலிஸாருடன் இணைந்து முப்படையினர் களப்பணியாற்றுகின்றனர். போர் நிறை வுற்ற 2009 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை 9,480 ஏக்கர் காணிகள் விடுவிக் கப்பட்டுள்ளன. எமது அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை 615 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் மூலம் மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் -எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.முரளிதரனால் கனகாம்பிகைக்குளத்தில் காணி விடுவிப்புக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இராணுவ முகாமின் வேலியை 10 மீற்றர் தூரம் பின்னோக்கி நகர்த்துவதன் மூலம் 3 குடும்பங்களுக்குச் சொந்தமான ஒன்றரை ஏக்கர் காணியை விடுவிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டி னார். இதனைச் சாதகமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகப் பாதுகாப்பு பிரதியமைச்சர் தெரிவித்தார்.

திருவிழாக் காலங்களில் கனகாம்பிகைக்குள முகாம் அமைந்துள்ள வீதியைப் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் பிரதியமைச்சர் ஏற்றுக்கொண்டார். மேலும், அப் பகுதியில் இராணுவக் கட்டடத்துடன் உள்ள காணியை விடுவிப்பதற்கு இராணுவத்தினரால் 8.5 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ள நிலையில், கோயில் நிர்வாகத்தால் அத்தொகையைச் செலுத்த முடியாதிருப்பதை மாவட் டச் செயலாளர் சுட்டிக்காட்டியதையடுத்து, அதனை மீள்பரிசீலனை செய்யவும் பிரதியமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் பாதுகாப்பு பிரதியமைச்சரால் பார்வையிடப்பட்ட இயக்கச்சியிலுள்ள காணியை இன் னும் 3 மாதங்களுக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப் படும் என இராணுவத்தினர் இதன்போது தெரிவித்தனர்.

வட்டுவாகல் மற்றும் கேப்பாபிலவு காணி உரிமையாளர்கள் சார்பில் கலந்துகொண்டவர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். வட்டுவாகல் பகுதியில் பொதுமக் களின் தனியார் காணிகளை விடுவிப்பதற்கு முன்பாக, அப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை நிறைவு செய்து காணியை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதியமைச்சர் உறுதி அளித்தார்.

கேப்பாபிலவில் உடனடியாக 6.5 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் குறிப் பிட்ட பிரதியமைச்சர், எஞ்சிய காணிகளை விடுவிப்பது தொடர்பில் மாவட்ட மட்டத்தில் குழுவொன்று அமைக் கப்பட்டு, கள நிலைமைகளை ஆராய்ந்து தீர்மானம் எடுக் கப்படும் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.திலகநாதன், வன்னிப் பிராந்தியக் கட்டளைத் தளபதி, கிழக்கு கடற்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், மேலதிக மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்பு அமைச் சின் உயர் அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-05)

## புதிய இராணுவத் தளபதி...

இவ்வருடம் ஜூன் மாதம் முதல் இராணுவத்தின் தலைமை அதிகாரியாக பணியாற்றி வந்தார்.

இலங்கை பீரங்கிப் படையணியின் மூத்த அதிகாரியான இவர், தனது இராணுவ சேவையில் பல முக்கியமான கட்டளை மற்றும் தலைமைப் பொறுப்புகளை வகித்துள்ளார். (அ)

## வடக்கு, கிழக்கு ஊடகவிய...

பாதிக்கும் சட்டங்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும், ஊடக சுதந்திரத்தை வலுப்ப டுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது இடம்பெற்ற தாக்குதல்கள் மற்றும் கொலை சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஊடகத்துறைக்கென ஊடக வல்லுநர்களுக்கான பட்டய நிறுவனம் என்ற தொழில்முறை நிறுவனத்தை அமைக் கும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

2026 வரவு-செலவுத் திட்டத்தில் ஊடகவியலாளர்க ளின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்காக 104 மில் லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மொழிப்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப திறன் மேம்பாட்டு திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுக்கான சுகாதார காப்புறுதி திட் டம் தயாராகி வருவதாகவும், குறைந்த கட்டண இணைய தரவுத் தொகுப்பை வழங்க தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கென புதிய வீடமைப்பு திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்த பிரதி அமைச்சர், நாட்டின் வீடமைப்பு திட்டத்தின் கீழ் அடுத்த மூன்று ஆண்டுகளில் வீட்டு பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இந்த ஆண்டுக்குள் 36 ஆயிரம் புதிய வீடுகள் நிர்மாணிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகளை விரைவாக வழங் கும் பணிகளும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள் ளப்படும் என பிரதியமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## கடமை தவறிய பூஜித....

கடந்த 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவம் நடக்கவிருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமை, கடமை பொறுப்புகளை தவறியமை, மனிதப் படுகொலைக்கு ஆதரவு வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந் தர அடையாளம் காணப்பட்டதை அடுத்தே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய, திலக்கரத்ன பண்டார ஆகிய மூவரடங்கிய மேல் நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த விசாரணைகள் நடந்தன.

இந்த வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பூஜித் ஜய சுந்தர குற்றவாளி என்று பிரியந்த லியனகே, திலக்கரத்ன பண்டார ஆகிய பெரும்பான்மை நீதிபதிகள் தீர்ப்பை அறிவித்துள்ளனர்.

பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்ப்பை, மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாமின் தலைவர் நீதிபதி பிரியந்த லியனகே அறிவித்தார்.

அதில், "ஈஸ்டர் வெடிகுண்டுத் தாக்குதல் நடாத்தப்பட இருப்பதாக முன்னரே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அது தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறியமையின் ஊடாக, கடமைகளைத் தவறியுள்ளமையால், 268 பேர் உயிரிழந்ததுடன், 586 பேர் காயமடைந்திருந்தனர்" என்று தெரிவித்தார்.

மேலும், "இந்தக் காலப் பகுதியில் நாட்டின் பொலீஸ் மா அதிபராக பிரதிவாதி பூஜித் ஜயசுந்தர கடமையாற்றி யிருந்தார். பிரஜைகளை பாதுகாக்கின்றமை, பொது மக்கள் பாதுகாப்பு ஆகியவை இவரது பொறுப்பு. எனினும், ஈஸ்டர் தினத்தில் கொழும்பு மற்றும் சனநெரிசல் அதிக மான பகுதிகளிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்கள் மற் றும் சுற்றுலா ஹோட்டல்களை இலக்கு வைத்து தற் கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட இருப்பதாக 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் தேதி மாலை அப்போதைய புலனாய்வு சேவை பணிப்பாளர் திலங்க ஜயவர்தனவால் இந்தப் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டிருந்தது" என்று குறிப்பிட்டுள்ளார் நீதிபதி பிரியந்த லியனகே.

அத்துடன், உளவுத் தகவல் கிடைத்திருந்த போதிலும், அதைத் தடுப்பதற்கு இவர் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும், குற்றங்களைத் தடுப்பதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி என்ற வகையில் அவர் தமது பொறுப்பைத் தவறவிட்டு உள்ளதாகவும் நீதிபதி பிரியந்த லியனகே தீர்ப்பில் அறிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து, முன்னாள் போலீஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு மரண தண்டனை வழங்கும் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. ஆயினும், மூவரடங்கிய நீதிபதிகள் குழாமிலுள்ள மற்றைய நீதிபதி விராஜ் வீரசூரிய தனது தனிப்பட்ட தீர்ப்பை அறிவித்துள்ளார்.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரதிவாதி மீதான குற்றச் சாட்டுகள் சாதாரண சந்தேகத்திற்கு அப்பால் சென்று உறுதி செய்யப்படாமையால், அவரை விடுதலை செய் வதாக அறிவித்துள்ளார்.

மேலும், தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக முன்கூட்டியே உளவுத்துறையின் எச்சரிக்கை கிடைத்திருந்த போதிலும், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை, கடமையை அலட்சியம் செய்தமை, கொலைக்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட் டுகளில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண் டோவுக்கு, கொழும்பு விசேட மூவர் நீதிபதிகள் கொண்ட விசாரணை அமர்வின் பெரும்பான்மை நீதிபதிகள் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளனர்.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட ஈஸ்டர் தினத்தில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன.

மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள், நட்சத்திர ஹோட்டல்கள் ஆகியவற்றை இலக்கு வைத்து இந்தத் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டிருந்தன.

இந்தத் தாக்குதல்களில் 268 பேர் பலியானதுடன், 586 பேர் காயமடைந்தனர். தேசிய தவ்ஹீத் ஜமாஆத் அமைப்பால் இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகப் பின்னர் உறுதி செய்யப்பட்டது.

எட்டு தற்கொலை குண்டுதாரிகளால் நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், 40 வெளிநாட்டவர்களும், 45 சிறார் களும் உயிரிழந்தனர்.


இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்த விசாரணைகளின் அடிப்படை யிலேயே பூஜித் ஜயசுந்தரவுக்கு மரண தண்டனை வழங் கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடந்து வந்த 30 ஆண்டுக்கால யுத்தம் 2009ஆம் ஆண்டு மே 18ஆம் தேதி முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, இலங்கையில் நடாத்தப்பட்ட பயங் கரவாத தாக்குதலாக 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்கு தல் கருதப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

## அமைச்சர்கள் பங்கேற்புடன் நேற்று மருதங்கேணியில் மக்கள் சந்திப்பு!



யாழ்ப்பாணம், ஒக. 01

"வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற கருப்பொருளின் கீழ் யாழ்ப்பாணம், வடமராட்சி - மருதங்கேணியில் தேசிய மக்கள் சக்தியின் சிறப்பு மக்கள் சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெற்றது.

கலாசார மத்திய நிலையத்தில் மக்களின் பங்கேற்புடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரதேச மக்களின் அன்றாட வாழ்வாதாரப் பிரச்னைகள், பிரதேச அபிவிருத்தித் தேவைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதம அழைப்பாளர்களாக கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள், பிரதேச முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு தங்களது கருத்துகள் மற்றும் தேவைகளை முன்வைத்தனர்.

இந்த மக்கள் சந்திப்பு, அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் பொதுமக்கள் நேரடியாக கலந்துரையாடும் முக்கிய தளமாக அமைந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## பிறரின் பயண பொதிகளை எடுத்துச் செல்ல வேண்டாம்!

### விமானப் பயணிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 01

விமானப் பயணம் உள்ளிட்ட எந்தவொரு பயணத்தின் போதும், பிறருக்குச் சொந்தமான பொதிகள் அல்லது பயணப் பைகளை எடுத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு இலங்கை சுங்கத் திணைக்களம், விமானப் பயணிகள் மற்றும் பொதுமக்களிடம் விசேட கோரிக்கை விடுத்துள்ளது.

பயணிகளுக்குத் தெரியாமலேயே போதைப்பொருட்கள் உள்ளிட்ட சட்டவிரோதப் பொருட்களைக் கடத்துவதற்கு சில குற்றக் குழுக்கள் அவர்களை பயன்படுத்தும் அபாயம் காணப்படுவதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா தெரிவிக்கையில், தாம் எடுத்துச் செல்லும் பொருளின் தன்மை குறித்தே தெரியாமல் பொதுமக்கள் கடுமையான குற்றச் செயல்களில் சிக்கிக்கொள்ளும் அபாயம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மிக நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள்கூட அறியாமலேயே போதைப்பொருள் கடத்தல் குழுக்களால் பயன்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் 19 வயதுடைய இளைஞர் ஒருவரின் பெயரைப் பயன்படுத்தி பெருந்தொகையான போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கப்பட்ட சம்பவமும் பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பயணப் பையை உரிமையாளர் தாமே பரிசோதித்தாலும் எளிதில் கண்டறிய முடியாத வகையில் போதைப்பொருட்களை மறைத்து வைக்கும் நுட்பங்களை கடத்தல்காரர்கள் பயன்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலவச விமானப் பயணச்சீட்டு வழங்கி வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்வதாக யாரேனும் முன்வந்தால், அதன் பின்னணியில் உள்ள உண்மையான நோக்கம் குறித்து மிகுந்த அவதானத்துடன் சிந்திக்குமாறும் சுங்கத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

உலகின் பல நாடுகளில் போதைப்பொருள் கடத்தல் குற்றங்களுக்கு மரண தண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன.

எனவே, எந்தச் சூழ்நிலையிலும் தமக்குச் சொந்தமில்லாத பொதிகள், பயணப் பைகள் அல்லது பொருட்களை எடுத்துச் செல்ல சம்மதிக்க வேண்டாம் என இலங்கை சுங்கத் திணைக்களம் பொதுமக்களை மேலும் வலியுறுத்தியுள்ளது. (அ)

# இலங்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் டொலர்கள் கடன் உதவி!


### பொருளாதார அழுத்தத்தை எதிர்கொள்வதற்கு

கொழும்பு, ஒக. 01

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் மோதலால் அதிகரித்துள்ள பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்ளும் வகையில், இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் கொள்கை அடிப்படையிலான கடன் உதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகரித்துள்ளது.

இலங்கையின் வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்துறை சீர்திருத்தங்களை வலுப்படுத்துவதுடன், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் போட்டித்திறனை மேம்படுத்தவும், புதிய முதலீடுகளை ஈர்க்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும், உலகளாவிய பொருளாதார அதிர்வுகள் மற்றும் மத்திய கிழக்கு மோதல் போன்ற வெளிப்புற சவால்களின் தாக்கத்தை சமாளிக்கும் இலங்கையின் பொருளாதார தாங்குதிறனை வலுப்படுத்துவதற்கும் இந்த நிதியுதவி உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




இலங்கையின் பொருளாதார மீட்பு மற்றும் நிலையான வளர்ச்சியை ஆதரிக்கும் நோக்கில் இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

# வடக்கு மாகாண மக்களின் நம்பிக்கையை காப்போம்!

### அமைச்சர் சந்தன அபேரத்ன உறுதி

வவுனியா, ஒக. 01

வட பகுதி மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்த நம்பிக்கையை முழுமையாக பாதுகாப்போம். மீண்டும் ஒரு போதும் இனவாத அல்லது மதவாத மோதல்கள் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய ஒரு இலங்கைத் தேசியத்தைக் கட்டியெழுப்புவோம் என பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வடக்கு பிராந்திய ஆவணக் காப்பகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

வட மாகாண மக்கள் இதுவரை காலமும் பிறப்பு, திருமணம், இறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட அடிப்படை ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் கொழும்பில் உள்ள பிரதான ஆவணக் காப்பகத்துக்குச் செல்ல வேண்டியிருந்த அசௌகரியத்துக்கு தீர்வு காணும் வகையில், பதிவாளர் நாயகம் திணைக்களத்துக்குச் சொந்தமான வடக்கு பிராந்திய ஆவணக் காப்பகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்ன மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவன் செனரத் ஆகியோரின் தலைமையில் வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் உள்ள ஏ-9 வீதி, மன்னக்குளத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் சந்தன அபேரத்ன-

இதுவரை காலமும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கொழும்பு மாளிகாவத்தை ஆவணக் காப்பகத்துக்குச் செல்லவேண்டியிருந்ததால், மக்களுக்கு பல நாட்கள் விரயமானதுடன், போக்குவரத்து மற்றும் தங்குமிடத்திற்காகப் பெருமளவு பணத்தை செலவிடவேண்டியிருந்தது.

இந்த புதிய பிராந்திய ஆவணக் காப்பகம் நிறுவப்பட்டதன் மூலம் மக்களின் நேரமும் பணமும் சேமிக்கப்படுவதோடு, அப்பகுதியின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் விவசாயத்துக்கும் ஏற்பட்ட தடைகள் முற்றாக நீக்கப்படும். மேலும், இந்த அலுவலகத்தை மையமாகக் கொண்டு மன்னகுளம் பகுதியில் ஒரு சிறிய நகரம் உருவாக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்குப் புதிய வணிக மற்றும் சுய தொழில் வாய்ப்புகள் பல உருவாகும்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் வடக்கில் நிலவும் கடுமையான குடிதண்ணீர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், யுத்தத்தினால் இழக்கப்பட்ட காணி உரிமைகளை மீள வழங்கி தீர்த்து வைக்கும் விசேட திட்டமும், சேதமடைந்த வீடுகளுக்காகப் புதிதாக 13,000 வீடுகளைக் கட்டுவதற்கான திட்டமும் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளன-என்றார். (அ)

# யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வரப்பட்டுள்ள 250 கிலோ கஞ்சாவில் 16 கிலோ சிக்கியது!

யாழ்ப்பாணம், ஒக. 01

யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வரப்பட்டுள்ள 250 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவில் 16 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவில் இருந்து வல்லிபுரம் கடற்கரை பகுதி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு 250 கிலோ கேரளக் கஞ்சா கடந்த வாரம் கடத்தி வரப்பட்டுள்ளதாக புலனாய்வுத்துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

தகவலின் பிரகாரம் பொலிஸார் தீவிர விசாரணைகளிலும் வடமராட்சிப் பகுதியில் தீவிர கண்காணிப்புப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நெல்லியடிப் பகுதியில் உள்ள பற்றைக்காடுகளுக்குள் கஞ்சாப் பொதி காணப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் அதனை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பொதி 16 கிலோகிராம் எனவும், அவற்றின் பெறுமதி சுமார் 20 இலட்ச ரூபாய் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்தி வரப்பட்ட 250 கிலோ கஞ்சாவை சிறு சிறு பொதிகளாக வடமராட்சிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கு கடத்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும், அது



தொடர்பில் பொலிஸார் தீவிர கண்காணிப்பிலும், விசாரணைகளிலும் ஈடுபட்டுள்ளதாகவும், அது தொடர்பிலான தகவல்கள் அறிந்தவர்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்குமாறும் பொலிஸார் கோரியுள்ளனர். (அ)

## புங்குடுதீவில் குளவி கொட்டுக்கு இலக்கான முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஒக. 01

புங்குடுதீவில் பனை வெட்டச் சென்றபோது கருங்குளவிக் கொட்டுக்கு இலக்கான 67 வயதுடைய முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிறிஸ்தோத்திரம் பிரான்ஸிஸ் சேர்ச்சில் என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் புங்குடுதீவு காட்டுப் பகுதிக்குள் பனை வெட்டும் பணிக்காகச் சென்றிருந்த வேளையில், கருங்குளவிக் கூட்டம் அவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 01.08.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.